**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti.**

**Deposition of Witness**

**C.C. 347 /2017**

**PW-1 16.03.2023**

| | |
|---|---|
| Name | பாபு |
| Father 's Name | காந்தையா |
| Village | சவாலாபேரி |
| Taluk | கயத்தார் |
| Caste | -- |
| Calling | பழைய இரும்புகடை |
| Religion | இந்து |
| Age | 32 |

(Accused A2 present. A1 absent. petition filed and allowed. )

**முதல் விசாரணை**

1. நான் சவாலாபேரியில் குடியிருந்து வருகிறேன். பழைய இரும்பு கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். வழக்கின் ஆஜர் 2ம் எதிரியை, 1ம் எதிரியையும் எனக்கு தெரியும். 06-05-2016 அன்று நான் பால்வண்டி குமாரகிரியில் இருந்து பால் எடுத்துக்கொண்டு அடுத்த ஊருக்கு போய் கொண்டிருந்தேன். மகேஷ் மற்றும் அவர் உடன் சேர்ந்த 5 நபர்கள் இரு சக்கரவாகனத்தில் வந்தவர்கள் கம்பு வைத்து எதிரே வரும்போது எனது வாகனத்தை தாக்கினார்கள் . நான் வாகனத்தை நிறுத்தி எதிரிகளுடன் ஏன் இவ்வாறு செய்கீறீர்கள் என்று கேட்டேன்.

2. அப்போது எனது வாகனத்தின் கதவை திறந்து என்னை கீழே இழுத்துபோட்டு அந்த எதிரிகளில் ஒரு நபர் என்னை தலையில் அடித்துவிட்டார். வாகனத்தின் சாவியை எடுத்து கையில் வைத்துக்கொண்டு என்னிடம் தரமாட்டேன் என்று சொல்லி, கெட்ட வார்த்தைகளால் சத்தம்போட்டனர். எதிரே வந்த நபர்கள் எதிரிகளிடம் பேசி வாகனத்தின் சாவியை

பெற்று தந்தார்கள். எனது ஊருக்கு செல்ல முற்படுகையில் எனக்கு தலையில் அடிபட்டிருந்ததால் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தார்கள்.

3. அங்கு போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அந்த புகார் வாக்குமூலத்தில் நான் கையெழுத்து செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் சொல்லச்சொல்ல போலிசார் பதிவு செய்தார்கள். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதிரிகளின் பெயர் விலாசம் போலிசார் சொல்லிதான் தெரியும் என்றால் மகேஷ்குமார் பெயரை அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். மற்றவர்களை தெரியாது.

2. போலிசார் என்னிடம் அந்த 6 நபர்களை அடையாளம் காட்டினார்களா என்றால் 2 நபர்களை மட்டும் அடையாளம் காட்டினார்கள்.

3. நான் புகார் கொடுத்த போது மகேஷ்குமார் பெயர் மற்றும் அவர்கள் வந்த வண்டியின் எண் குறிப்பிட்டு புகார் தெரிவித்தேன்.

4. ஒவ்வொருவரும் தனித்தனியாக வண்டியில் வந்தார்கள், மொத்தம் 4 வண்டிகள் இருந்திருக்கும்.

5. 108 ஆம்புலன்ஸ்ல் என்னுடன் எனது அண்ணன் ராஜகோபால் வந்தார்.

6. சம்பவம் நடக்கும் போது இரவு 8.30 மணிக்கு மேல் இருக்கும். மருத்துவமனையில் சேரும்போது என்னுடன் ராஜகோபால் வந்தார் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தோம் என்று ஞாபகம் இல்லை.

7. மருத்துவரிடம் சிகிச்சை பெற அரசு மருத்துவமனையில் சேரும்போது யார் யார் தன்னை அடித்தார்கள் என்று கூறினேனா என்றால் மகேஷ்குமாருடன் அடையாளம் தெரியாத நபர்கள் என்னை அடித்தார்கள் என்று கூறினேன்.

8. போலிஸ் விசாரணையில் எதிரிகளின் பெயர்களை போலிசார் என்னிடம்

சொன்னார்களா என்றால் இல்லை. ஒருவர் பெயர் மட்டும் எனக்கு தெரியும்.

9. நான் பால் எடுக்க சென்ற ஊரில் தமிழக மக்கள் முன்னேற்ற கட்சியை சார்ந்தவர்கள் அந்த ஊர் வழியாக வாக்கு கேட்டு வந்தார்கள் என்றால் சரிதான். அந்த ஊர்வலத்தில் சுமார் 50 பேர்கள் இருந்திருப்பார்கள்.

10. சம்வம் நடந்தது கூட்டத்தில் வந்தவர்களுக்கு தெரியும் என்றால் வாய்ப்பில்லை. எனக்கு அடிப்பட் விபரம் ஊரில் இருந்தவர்களுக்கு தெரியுமான என்றால் வாய்ப்பில்லை.

11. நான் எந்த ஜாதி கட்சி அரசியலில் சேர்ந்தவர் இல்லை.

12. புகாரில் கொடுக்கப்பட்ட 6 நபர்களையும் அன்றுதான் நான் பார்த்தேன் அவர்களும் அன்றுதான் என்னை பார்த்தார்கள். அதற்கு முன்பு அறிமுகம் இல்லை. அன்றைய தேதியில் எனக்கும் எந்த ஜாதியை சார்ந்தவர்கள் என்று தெரியாது, அதே போல் நான் எந்த ஜாதியை சேர்ந்தவர் என்று அவர்களுக்கும் தெரியாது.

13. சொன்னது போல் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், புகார் தெரிவித்த நபர்கள் வேறு ஜாதியை சேர்ந்த கட்சிநபர்கள் ஒட்டு கேட்டு வந்ததால் பொய்யாக அவர்கள் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

14. சம்பவம் நடந்த போது என்னுடைய உறவினர்கள் யாரும் இல்லை, நான் மட்டும்தான் இருந்தேன்.

15. எதிரிகளால் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

**என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு**

தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
**கோவில்பட்டி.**

**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti.**

**Deposition of Witness**

**C.C. 347 /2017**

**PW-2** **16.03.2023**

| | |
|---|---|
| Name | கோட்டைசாமி என்ற கார்த்திக் |
| Father 's Name | ராமலிங்கம் |
| Village | சவாலாபேரி |
| Taluk | கயத்தார் |
| Caste | -- |
| Calling | கூலி |
| Religion | இந்து |
| Age | 35 |

(Accused A2 present. A1 absent. petition filed and allowed. )

**முதல் விசாரணை**

1. நான் சவாலாபேரியில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 எனது தம்பி. சம்பவ தினத்தன்று நான் வீட்டில் இருந்தேன். அப்போது எனது தம்பி பால்வண்டி ஓட்டி வரும்போது கரிசல்குளத்தை சேர்ந்த பையன்கள் எனது தம்பியை அடித்துவிட்டதாக கேள்விபட்டி நான் ரோட்டிற்கு வந்தேன். அப்போது அங்கு கூட்டமாக இருந்தது. கரிசல்குளத்தை சேர்ந்த பையன்கள் எனது தம்பியை அடித்துவிட்டார்கள். அடிபட்ட எனது தம்பி தலைவலி இருந்ததால 10 நாட்கள் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவ நடந்த அன்று எனது தம்பி அவரை கரிசல்குளத்தை சேர்ந்தவர்கள் அடித்துவிட்டதாக சொன்னார்.

2. என்னை போலிசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

இதுவரை யாரும் என்னை விசாரணை செய்யவில்லை.

3. சொன்னது போல் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் சம்பவம் நடக்கவில்லை, நான் கேள்விபட்டதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

**என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு**

தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஓம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
**கோவில்பட்டி.**